முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# மட்டம் II பரீட்சை – 2022 யூலை

# (203) வணிகச் சட்டம்

(Business Law)

2022-08-20
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  - (2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*
  - (4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (6) *100 புள்ளிகள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

---

## பகுதி A

## நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.6** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் (ETF) சட்டத்தில் உள்ளடக்கப்படாத ஊழியர் வகை எது?

(1) பல்கலைக்கழக ஊழியர்கள். (2) நியதிச்சட்ட நிறுவனங்களின் ஊழியர்கள்.
(3) வீட்டுப் பணியாளர்கள். (4) தனியார் துறை ஊழியர்கள்.

**1.2** கீழ்வருவனவற்றுள் மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரம் **அல்லாதது** எது?

(1) விவாகரத்து தொடர்பான வழக்குகள். (2) EPF, ETF நிலுவைகளை மீட்டெடுத்தல்.
(3) காணி தொடர்பான வழக்குகள். (4) ஒப்பந்த மீறுகை தொடர்பான வழக்குகள்.

**1.3** கீழ்வருவனவற்றுள் முஸ்லிம் சட்டம் விசேடமாகப் பிரயோகிக்கப்படுகின்ற ஒரு சந்தர்ப்பமாக **அமையாதது** எது?

(1) குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் (Custody)

(2) மரபுரிமை (Inheritance)

(3) திருமணம் மற்றும் திருமண உரிமைகள்.

(4) சொத்துகளை ஈடு வைத்தல் தொடர்பான விடயங்கள் (Utti mortgage)

**1.4** சலுகைகளைத் தீர்மானிக்கப் பின்பற்றக்கூடிய முறைகளை கீழ்வருமாறு இனங்காணலாம் :

**(a)** தீர்மானிக்கப்பட வேண்டிய விலை முறை பற்றி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படலாம்.

**(b)** தரப்பினரிடையே ஏற்படும் இணக்கத்தின் மூலம் விலை தீர்மானிக்கப்படலாம்.

**(c)** விலை தீர்மானிக்கப்படவில்லை எனின், கொள்வனவாளர் நியாயமான விலை ஒன்றைச் செலுத்துதல் வேண்டும்.

மேலுள்ளவற்றுள், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க, சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

**1.5** கீழ்வருவனவற்றுள் சர்வதேச வர்த்தகத்தில் CIF உடன்படிக்கை ஒன்றில் கொள்வனவாளருக்கு விற்பனையாளரால் வழங்கப்பட வேண்டிய ஓர் ஆவணம் **அல்லாதது** எது?

(1) காப்புறுதிச் சான்றிதழ் (2) விலை விபரப் பட்டியல் (Invoice).

(3) நாணயக் கடிதம். (4) வார்நாமம்.

**1.6** 1950 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்திற்கு இணங்க, கீழ்வருவனவற்றுள் எந்தவொரு கைத்தொழில் பிணக்கையும் தீர்ப்பதற்கான ஒரு மாற்று முறையாக **அமையாதது** எது?

(1) கூட்டு உடன்படிக்கை. (2) தீர்ப்பாயம்.

(3) மாவட்ட நீதிமன்றம். (4) தொழில் நியாயசபை.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க, விற்பனை ஒப்பந்தமொன்று எழுத்து மூலமாக மாத்திரமே செய்யப்பட முடியும்.

**1.8** வார்நாமம் (Bill of Lading) ஆனது கப்பலேற்றப்பட்ட பொருள்களுக்கான ஒரு பற்றுச்சீட்டாகத் தொழிற்படுகிறது.

**1.9** 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டமானது, ஒரு தொழில்தருநரின் கீழ் மூன்று பூரணமான ஆண்டுகளைவிடக் குறையாத சேவைக் காலத்தைக் கொண்டுள்ள பணியாளர்களுக்கு ஏற்புடைய ஒரு சட்டமாகும். (01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.10** முகவராண்மை உருவாகின்ற இரண்டு (02) வழிமுறைகளைக் (ways) குறிப்பிடுக.

**1.11** ஒரு CIF உடன்படிக்கையில் விற்பனையாளருக்குக் காணப்படுகின்ற இரண்டு (02) பொறுப்புகளைக் (responsibilities) குறிப்பிடுக.

**1.12** சுயாதீன ஒப்பந்தகாரர் ஒருவருக்கும் ஊழியர் ஒருவருக்குமிடையேயான வேறுபாட்டை இனங்காண்பதற்கு பிரயோகிக்கப்படக்கூடிய இரண்டு (02) நீதிமுறையான சோதனைகளைக் (judicial tests) குறிப்பிடுக.

**1.13** 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் இனங்காணத்தக்க இரண்டு (02) வகையான லீவுகளை (விடுப்புகளை) குறிப்பிடுக.

**1.14** இருப்புச் சந்தையிலுள்ள உள்ளக கையாளுகை (Inside dealing) / வியாபாரம் (Trading) என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)
(புள்ளிகள் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

*லறி* என்பவர் ஒரு வாகன பழுதுபார்ப்பு கூட (கராஜ்) உரிமையாளரான **ஜேம்ஸ்** இடமிருந்து லொறி ஒன்றை வாங்கியுள்ளார். **லறி** அதனை தனது போக்குவரத்து வியாபாரத்திற்கு பல மாதங்களாகப் பயன்படுத்துகிறார். எவ்வாறாயினும், இந்த லொறி **பீட்டர்** என்பவரால் பாரிய பழுதுபார்ப்பு ஒன்றிற்காக **ஜேம்ஸ்** இன் வாகன பழுதுபார்ப்பு கூடத்தில் விடப்பட்ட ஒரு லொறியாகும். **லறி** அவரது வழக்கமான பாதையில் லொறியில் கண்டிக்குச் சென்று கொண்டிருந்தபோது, சில மாதங்களுக்கு முன்னர் பழுதுபார்ப்புக்காக **ஜேம்ஸ்** இன் வாகன பழுதுபார்ப்பு கூடத்தில் விடப்பட்டு, காணாமற் போயிருந்த, அதே லொறிதான் இது என்பதை **பீட்டர்** இனங்கண்டு கொண்டார். இதனால் **பீட்டர்** அந்த லொறியை தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டார். இதன் பின்னர், **ஜேம்ஸ்** இற்கு இந்த லொறியில் எந்த உரிமையும் இல்லை என்பதை **லறி** உணர்ந்து கொண்டதுடன் **லறி** அதனை அதனது உண்மையான உரிமையாளரான **பீட்டரிடம்** திருப்பிக்கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. **லறி** தான் செலுத்திய பணத்தை மீளப் பெறுவதற்காக **ஜேம்ஸ்** மீது வழக்குத் தொடுத்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இந்த விடயம் தொடர்பில் **லறிக்கு** உள்ள சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொருள்களின் இரண்டு (02) வகைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

ஒரு கம்பனியின் முகாமைக்கும் கட்டுப்பாட்டிற்கும் பிரதான நபர்களாக இருப்பவர்கள் அதன் பணிப்பாளர்கள் ஆவர். எனவே, பணிப்பாளர்களைக் கவனமாகத் தெரிவுசெய்வது முக்கியமானதாக இருக்கின்ற அதே வேளை அவர்களுடைய தகைமைகள் தொடர்பாகவும் கம்பனிக்கு அவர்களுடைய கடமைகளைக் குறித்துரைப்பது தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்துவதும் முக்கியமானதாகும். இலங்கையில் உள்ள 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், மேற்கூறிய பகுதிகள் தொடர்பான ஏற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், பணிப்பாளராக ஆவதற்கு பூரணப்படுத்தப்பட வேண்டிய நான்கு (04) தகைமைகளைக் (qualifications) **குறிப்பிடுக.**
(04 புள்ளிகள்)

(b) கம்பனிகள் சட்டத்தின் கீழ் பணிப்பாளர் ஒருவரின் நான்கு (04) பிரதான கடமைகளை (main duties) **நிரற்படுத்துக.** (04 புள்ளிகள்)

(c) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றிற்குத் தேவையான பணிப்பாளர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கையைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

அரசாங்க ஊழியரான **சுராஜ்** மாதாந்தம் அண்ணளவாக ரூபா 100,000/- இனைச் சம்பாதிக்கிறார். அவர் வழமையாக தனது மாதாந்த மளிகைப் பொருள்களை **விமல் ஸ்டோர்ஸ்** இல் வாங்குகிறார். **விமல் ஸ்டோர்ஸ்** இரண்டு பெரிய அளவிலான களஞ்சியசாலைகளைக் கொண்டுள்ளதுடன் அவர்களுடைய நுகர்வுப் பொருள்கள் அங்கு களஞ்சியப்படுத்தப்படுகின்றன. மே மாதத்திற்குத் தேவையான மாதாந்த மளிகைப் பொருள்களை வாங்குவதற்காக சென்றிருந்த **சுராஜ்**, பால்மா பெட்டியொன்றின் விலையை **விமல் ஸ்டோர்ஸ்** ரூபா 780/- இலிருந்து ரூபா 1020/- ஆக அதிகரித்திருப்பதையும் அதற்காக அவர்கள் உண்மையாக பெட்டியில் அச்சடிக்கப்பட்டிருந்த விலையை மறைத்து புதிய விலையைக் கொண்ட ஸ்டிக்கர் ஒன்றினை ஒட்டியிருந்ததையும் கண்டறிந்தார். **விமல் ஸ்டோர்ஸ்** முறையற்ற விதத்தில் அதிக இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தன்னிடமிருந்த பழைய பால்மா பெட்டிகளில் புதிய விலையினை ஒட்டி விலை மாற்றம் செய்திருப்பதை **சுராஜ்** உணர்ந்து கொண்டார். விலை மாற்றம் பற்றி **சுராஜ், விமல் ஸ்டோர்ஸாருடன்** வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது, **சுராஜ்** இற்கு எவ்வித மளிகைப் பொருள்களையும் விற்பனை செய்ய முடியாது என **விமல் ஸ்டோர்ஸார்** மறுப்புத் தெரிவித்ததுடன் கடையை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் பணித்தனர். **சுராஜ்** தற்போது நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையிடம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி சூழ்நிலையில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் கடமைகளை **விபரிக்குக.**
(06 புள்ளிகள்)

(b) மேற்படி சூழ்நிலையில் **விமல் ஸ்டோர்ஸ்** இன் பொறுப்பினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**ஆன்** என்பவர் **சில்வா**வுக்கு ரூபா 52,000/- இற்கான காசோலையொன்றை எழுதியிருந்ததுடன் அதில் "கைமாறத்தகாதது" என்ற குறுக்குக் கோடிடலை இட்டுள்ளார். **சில்வா** அதனை காசாக மாற்றுவதற்காக வங்கிக் கருமபீடத்தில் சமர்ப்பித்தபோது, காசோலையில் ரூபா இருபத்தைந்தாயிரம் மாத்திரம் என எழுத்தில் எழுதப்பட்டிருந்ததை காசாளர் அவதானித்தார். மேலும், **ஆன்** இன் வங்கி மீதி ரூபா 10,000/- ஆகக் காணப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி விடயம் தொடர்பில் வங்கியின் பொறுப்பினை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) 'பொதுவான குறுக்குக்கோடிடல்' மற்றும் 'விசேடமான குறுக்குக்கோடிடல்' ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**அபேக்ஷா** என்பவர் **வரையறுக்கப்பட்ட ஆரக்ஷா காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** ஆயுள் காப்புறுதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார். கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் அவர் வைத்தியர் ஒருவரிடம் வைத்திய ஆலோசனை பெற்றுள்ளாரா என அவரிடம் வினவப்பட்டது. வைரஸ் காய்ச்சலுக்காக வைத்தியரிடம் ஆலோசனை பெற்று சில சத்துள்ள பாணிகளை அவர் பெற்றிருந்தபோதும் அந்த நோயின் காரணமாக அவர் வேலையிலிருந்த ஒதுங்கியிருக்கவில்லை என்பதால் **அபேக்ஷா** "இல்லை" என்றே பதிலளித்தார். எவ்வாறாயினும், ஆயுள் காப்புறுதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், வைரஸ் காய்ச்சலின் கடுமையான மாறுபாடு **அபேக்ஷாவுக்கு** கண்டறியப்பட்டதுடன் அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். பின்னர், வைரஸ் காய்ச்சலால் நுரையீரலில் ஏற்பட்ட மோசமான பாதிப்பு காரணமாக அவர் இறந்துவிட்டார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட ஆரக்ஷா காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுள் காப்புறுதியின் கீழ், **அபேக்ஷாவின்** பின்னுரித்தாளி (தங்கிவாழ்பவர்) நட்டஈடு கோர முடியுமா என்பதை **விபரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) காப்புறுதி ஒப்பந்தமொன்றின் மூன்று (03) பிரதான கூறுகளை (elements) **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

(A) **ராணி** என்பவர் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** உதவிக் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளதுடன் கம்பனியின் நேர்முகத் தேர்விலும் பங்குபற்றியுள்ளார். கம்பனியின் முகாமை அவரை அந்தப் பதவிக்கு நியமிக்கத் தீர்மானித்தது எனினும் அது பற்றி அவருக்குத் தெரியப்படுத்த வில்லை. ஆயினும் அந்தப் பதவிக்கு அவரை நியமிக்கவிருப்பது பற்றி **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** பணிப்பாளர் ஒருவரால் அவருக்கு உத்தியோகபூர்வமற்ற முறையில் தெரியப்படுத்தப் பட்டிருந்தது. அந்தச் செய்தியை அறிந்ததும் அவர் தான் தற்போது செய்துகொண்டிருந்த வேலையை இராஜினாமா செய்திருந்தார். எனினும் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** அந்தப் பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்கத் தீர்மானித்தது.

**ராணியின்** கணவரான **ராஜா** அவர்களுடைய வீட்டை ரூபா 15 மில்லியனுக்கு **அமல்** என்பவருக்கு விற்க விருப்பந் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளித்த **அமல்,** அதனை ரூபா 14 மில்லியனுக்கு வாங்குவதற்கான தனது சம்மதத்தைத் தெரிவித்திருந்தார். அதற்கு **ராஜா** மறுப்புத் தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும், பின்னர், ரூபா 15 மில்லியனுக்கே அதனை வாங்குவதற்கு **அமல்** தனது சம்மதத்தைத் தெரிவித்திருந்தார். ஆனால், **ராஜா** தனது மனதை மாற்றிக் கொண்டதுடன் ரூபா 15 மில்லியனுக்குக்கூட விற்பனை செய்ய மறுத்திருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) விருப்பறிவிப்பு (offer) முடிவுறுத்தப்படுகின்ற இரண்டு (02) வழிகளை (ways) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** எதிராக **ராணிக்கு** இருக்கின்ற சட்ட உரிமையை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(c) **ராஜாவுக்கும் அமலுக்குமிடையே** ஒரு வலிதான (செல்லுபடியான) ஒப்பந்தம் காணப்படுகிறதா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(B) **வீணா** என்பவர் **கதிர் வணிகத்தின்** ஒரு முகாமையாளராக பணிபுரிகிறார். அவர், வணிகக் கொடுக்கல் வாங்கல்களின் அனைத்து அலுவலக ரீதியான பதிவுகளையும் அணுகியிருந்தார். **வீணா,** வணிகத்தினுடைய வாடிக்கையாளர்களின் பல பிரதான கணக்குகளையும் கையாண்டுள்ளார். எவ்வாறாயினும், **கதிர்** வணிகத்தை ஒத்த போட்டி வணிகமொன்றை **வீணா** ஆரம்பித்திருப்பதை **கதிர்** அவதானித்தார். **வீணா** இரகசிய இலாபமொன்றை ஈட்டுவதற்காக **கதிர் வணிகத்தில்** தொழில்புரியும் காலத்தில் திரட்டிய தகவல்களைப் பயன்படுத்தியுள்ளார்.

அதே வேளை, வணிகத்தை நடத்திச் செல்வதற்கு **கதிருக்கு** உதவுகின்ற அவரது நண்பனான **ரொனி**யிடம் காலியிலுள்ள தனக்குச் சொந்தமான ஆதனமொன்றை விற்பனை செய்வதற்கு பொருத்தமான கொள்வனவாளர் ஒருவரை கண்டறியுமாறு **கதிர்** கோரிக்கை விடுத்திருந்தார். **ரொனி** ஆதனத்தைக் கொள்வனவு செய்யும் கொள்வனவாளர் ஒருவரைக் கண்டுபிடித்து அது பற்றி **கதிருக்கு** அறிவித்திருந்தார். ஒரு வாரத்தின் பின்னர், முன்னைய விலையையும் விட அதிக

விலைக்கு வாங்க விருப்பந் தெரிவித்துள்ள கொள்வனவாளர் ஒருவரை **ரொனி** சந்தித்திருந்தார். எவ்வாறாயினும், அது பற்றி **ரொனி, கதிருக்கு** அறிவித்திருக்கவில்லை. **கதிர்**, குறிப்பாக ஆதனத்தை வாங்குவதற்கு விரும்பும் நபர் யாராவது இருப்பின் அறிவிக்குமாறு அறிவுறுத்தியிருந்தார். **கதிர்** முன்னைய கொள்வனவாளருக்கு ஆதனத்தை விற்பனை செய்துள்ளார். அதன் பின்னரே **ரொனி**யின் கவனயீனம் காரணமாக ஏறத்தாழ ரூபா 5 மில்லியன் நட்டத்தை, தான் அடைந்திருப்பதை **கதிர்** அறிந்து கொண்டார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) முகவராண்மைச் சட்டத்தின் கீழ் **கதிர்** தொடர்பில் **வீணா**வின் கடமைகளை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

(b) முகவராண்மைச் சட்டத்தின் கீழ், **கதிர்** மற்றும் **ரொனி** ஆகியோருக்கிடையிலான கடமைகளையும் உரிமைகளையும் **ஆராய்க.**

(05 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |